# சைவநீதி

விஷு வருடம் தை

SAIVANEETHI

JANUARY - FEBRUARY

2002



ரூபா 25/-

## பொருளடக்கம்


1. ஏன் பிறந்தார் மானிடராய்? ........ 01
2. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் ........ 02
3. சற்குருவை நாடிய மாணிக்கவாசகர் ........ 04
4. முக்கரண வழிபாடு ........ 07
5. மௌன தவ முனிவர் வாழ்வும் சிந்தனையும் ........ 10
6. தைப்பூசம் ........ 13
7. சிவப்பிரகாசம் ........ 17
8. ஆன்மா ........ 20
9. சிவவேடச் சிந்தையர் ........ 22
10. பிரதோஷ வழிபாடும் சோம சூத்திர பிரதக்ஷணமும் ........ 24
11. முருகன் பெருமை ........ 27


**சந்தா நேயர் கவனத்திற்கு**

* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறிய தரவும்.
* இதழ்கள் ஒழுங்காக கிடைக்காவிடின் எம்முடன் தொடர்பு கொள்ளவும் கிடைக்காத இதழ்களை அனுப்பி வைப்போம்.


**சைவநீதி மாத இதழ்**

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00

ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :



C. Navaneethakumar
42, Janaki Lane, Colombo - 04,
Sri Lanka. T.P. No : 595221

K.Ratnasabapathy
51, Thulasingam Street,
Pudupet, Madras - 600002,
South India. T.P. No : 8529984



**சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.**

உ

சிவமயம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 5 விஷு தை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் – 10

கௌரவ ஆசிரியர் :
ஞானசிரோமணி
சைவப்புலவர்மணி, வித்துவான்
திரு. வ. செல்லையா

மதியுரைஞர் :
சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்
திரு D.M. சுவாமிநாதன்
அறங்காவலர்
ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
திரு. அ. கந்தசாமி
**Chairman U.P.S**
திரு. கு. மகாலிங்கம்
Sivayougasami Trust Fund

துணை ஆசிரியர் :
திரு. சு. சதாசிவம்

பதிப்பாசிரியர்:
திரு. வே. திருநீலகண்டன்
லஷ்மி அச்சகம்.

விநியோகம்
திரு. க. சீனிவாசகம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர் :
திரு. செ. நவநீதகுமார்
42, ஜானகி ஒழுங்கை,
கொழும்பு – 04
தொ. பே : 595221

## ஏன் பிறந்தார் மானிடராய்?

பிறப்பிலே உயர்ந்தது மானிடப் பிறப்பு நிலையான இன்பமான முத்தி பெறச் சிறந்த இடம் இந்த உலகம். இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறுறென்று நோக்கி திருமால் முதலிய தேவர்கள் தாமும் இங்கு பிறவாமையில் நாள் அவமே போக்குகின்றோம் எனஎண்ணுவதாகத் திருவாசகம் கூறுகிறது.

மானிடராய் பிறந்தவர்கள் செய்யவேண்டிவை எவை?

சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவ நெறி சாரார் – அவனிதனில்
கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன் பிறந்தார் மானிடராய் இன்று.

என்பார் அதிவீரராம பாண்டியர்.

சிவகருமஞ் செய்ய வேண்டும். திருநீறு அணிய வேண்டும். உயர்ந்த நெறியாம் சைவநெறி சார்ந்து இறைவனைக் கைதொழ வேண்டும். இவை தாம் மானிடராய் பிறந்தவர் கடமை. அல்லாதவர் ஏன் மானிடராய்ப் பிறந்தார்? அதனால் என்ன பயன்?

போதொடு நீர் சுமந் தேத்திப் புகுவார் அவர் பின் புகுவேன் என்கிறார். அப்பரடிகள் பூவும் நீரும் கொண்டு இறைவனைப் போற்றி வழிபடலே இன்றியமையாத தொன்றாகும். "சலம் பூவொடு தூப மறந்தறியேன்" என்று அப்பரடிகள் கூறிய வண்ணம் நாமும் வாழ வேண்டும். எறும்பு முதல் யானை ஈறாக உள்ளவை இறைவனைப் பூசித்துப் பெற்ற பேறு கண்டும் சிவனைப் பூசிக்காதவர்கள் பேய்கள்.

எறும்பு கடை யானைதலை ஈசனைப் பூசித்துப்
பெறுங்கதி கண்டுந்தேறார் பேய்கள் – அறிந்து
உலகத்தார் உண்டென்பதில் லென்பான் வைய‌த்
தலகையாய் வைக்கப் படும்.

பூசை வழிபாட்டில் செலவு செய்த நேரமே நம்முடைய நேரம். அறவழியில் செலவு செய்த பணமே நம்முடைய பணம்.

# திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருக்கேதீச்சரம் பண்: நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருதுகுன்றமா மேருவினாணர வாவனலெரியம்பாப்
பொருதுமூவெயில் செற்றவன்பற்றிநின் றுறைபதியெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினையடையாவே. 1

பாடல்வீணையர் பலபலசரிதைய ரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவ ரமரர்கள்வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற்கரையினி லெழிறிகழ்மாதோட்டம்
கேலடியாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர்வினைதானே. 2

பெண்ணொர்பாகத்தர் பிறைதவழ்சடையின ரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர்பாடுவ ரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோ ரிச்சையினுழல்பவ ருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகே தீச்சரமடைபவர்க் கருவினை யடையாவே. 3

பொடிகொண்மேனியர் புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலை வேலினர் நூலினர் மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித் திருந்தகேதீச்சரம் பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடி பேணவல்லார்தம்மேன் மொய்த்தெழும்வினைபோமே. 4

நல்லராற்றவு ஞானநன்குடையர்தம் மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகேதீச்சர மிராப்பகனினைந்தேத்தி
அல்லலாசறுத் தரனடியிணைதொழு மன்பராமடியாரே. 5

பேழைவார்சடைப் பெருந்திருமகடனைப் பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற் கண்ணிபாலருளிய பொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின் மந்திகள்களிப்புற மருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப் பணிந்தநீண்மார்பர்கே தீச்சரம்பிரியாரே. 6

பண்டுநால்வருக் கறமுரைத்தருளிப்பல் லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடங்கைதொழக் காதலித்துறை கோயில்
வண்டுபண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடுமாதோட்டம்
தொண்டர்நாடொறுந் துதிசெயவருள்செய்கே தீச்சரமதுதானே. 7

தென்னிலங்கையர் குலபதிமலைநலிந்தெடுத் தவன்முடி திண்டோள்
தன்னலங்கெட வடர்த்தவற்கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடு மடியவரிறைஞ்சுகே தீச்சரத்துள்ளாரே. 8

பூவுளானுமப் பொருகடல்வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநின் னடியிணைகாண்கிலா வித்தகமென்னாகும்
மாவும்பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்தவெம்பெருமானே. 9

புத்தராய்ச்சில புனைதுகிலுடையவர் புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின் றுண்பவரியம்பிய வேழைமைகேளேன்மின்
மத்தயானையை மறுகிடவுரிசெய்து போர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபா லாவியின்கரையிற்கே தீச்சரமடைமின்னே. 10

மாடெலாமண முரசெனக்கடலின தொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல்கேதீச்சரத் தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன்சொ னவின றெழுபாமாலைப்
பாடலாயின பாடுமின்பத்தர்கள் பரகதிபெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்

# சற்குருவை நாடிய மாணிக்கவாசகர்

மட்டுவில். ஆ. நடராசா

சைவ சமயம் குரு லிங்க சங்கம வழிபாடுகளை வலியுறுத்துகின்றது. குரு என்னுஞ் சொல், பொதுவாக வித்தியாகுரு, சமயகுரு, அருட்குரு என்னும் மூன்று பிரிவினரையுங் குறிக்கும். இக்காலத்தில் வித்தியா குருவினதும் சமய குருவினதும் சேவையை எவரும் விலைக்கு வாங்கமுடியும். அருட்குருவை எவருமே விலை கொடுத்து வாங்க முடியாது. சமய சாதனைகள் புரிந்து தீவிரதர சத்திநிபாத நிலையெய்தியோரை நாடி வந்து அருட்குரு அருள்புரிவார்.

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"
என்கின்றார். தாயுமான சுவாமிகள்

தாயுமானவர் 'சற்குரு' என்னுஞ் சொல்லை உபயோகித்ததனால் அசற்குருவும் உண்டென்பதை உய்த்துணர முடிகின்றது. இப்போது அசற்குருவுக்குப் பஞ்சமேயில்லை. தம்மைத் தாமே குருவாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் அசற்குருமார் பலர்.

சைவசமய நூல்களைக் கற்றுணராது, கற்றபடியொழுகி அனுபவ ஞானம் பெறாது, நானென்னுஞ் செருக்குடன் பிறருக்கு உபதேசஞ் செய்பவன் அசற்குருவேயாவன். அவனிடம் உபதேசம் பெற்று அவன் காட்டிய வழியிற் செல்வோர். தம்மைப் பற்றிய பாவங்களை நீக்குவதற்குப் பதிலாகப் பாவப் பெருங்குழியில் வீழ்வர்.

"குருடர்க்குத் கோல் காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன், பின்
குருடரும் வீழ்வர்கள்................."
என்கின்றார் திருமூலர்.

முரணும் - மாறுபடும். இங்குக் கூறப்படும் மாறுபாடு வழிமாறுபாடு. கோல்காட்டுதல் - கோலின் ஒருபக்கத்தைக் குருடனின் கையிற் கொடுத்துவிட்டு மறுபக்கத்தைத் தான் பிடித்துக் கொண்டு சென்று வழிகாட்டுதல்; கோலால் வழிகாட்டுதல்.

சிவபெருமான் செழுநீர்க் கங்கை நதியையும் சந்திர கலையையுந் தலையிலே தரித்திருப்பவர். என்பு மாலை கிடந்தசையுந் திருத்தோள்களையுடையவர். புலித்தோலை ஆடையாக அணிபவர். அவருடைய நல்லருளால்,சுற்றத்தவர் மீது வைத்த பற்றையும் பிறவியையும் ஒழிக்கவல்ல சிவாகமக் கலையையும் மற்றெல்லாக் கலைகளையும் பதினாறாண்டு நிறையு முன்பே கற்றுணர்ந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**
வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றுமில்லை.

"மிக்கலையுஞ் செழுநீரும் மதிக்கலையு மிலைக்குமவர்
அக்கலையுந் தோளர் புலியதட் கலையர் நல்லருளால்
ஒக்கலையும் பிறக்கலையும் ஒழித்திடு மாகமக் கலையும்
எக்கலையுங் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண் டெல்லையினில"

என்கின்றது.

திருவாதவூரடிகள் புராணம் (மந்திரிச் சுருக்கம் 12)

அக்கு - எலும்பு, அதள் - தோள், கலை - ஆடை, ஒக்கல் - சுற்றம்

ஆகமக் கலையைக் கற்றுணர்ந்த போதிலும் திருவாதவூரர் சற்குருவை இனங்கண்டு, அவரையடைந்து ஞானோபதேசம் பெற முயன்றார்.

சிவாகமங்களைக் குருவிடங் கேட்டு, சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும். குருவின் உபதேசம் பெறாமல், தாமாகவே சிவாகமங்களைக் கற்போர், அவற்றிற் கூறப்படும் பொருள் பற்றிய மயக்கமேற்படும்போது தெளிவின்மை காரணமாகத் தாம் விரும்பியவாறே அவற்றுக்குப் பொருள் கொள்வர். இவ்வாறு பலரும் பலவாறாகப் பொருள் கொள்வது காரணமாக ஒன்றோடொன்று மாறுபடும் சமயங்கள் பல தோன்றுகின்றன. இப்போது இந்த நாட்டில் வாழும் சைவ சமயிகள் பலரும் பலவேறுவிதமான சைவசமயக் கருத்துக்களைக் கூறுவதற்கு குருபரம் பரையில் உபதேசம் நிகழாமையே முக்கிய காரணமாகும். (மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்த காலத்திலும் தெளிவின்மை காரணமாக) பிறழ்ந்த சமயக் கருத்துக்களைக் கூறும் போலிக் குருமார் பலர் இருந்திருத்தல் வேண்டும்.

அதனால், சிவாகமப் பொருளை ஐயந்திரிபின்றி அறிய விரும்பிய மாணிக்கவாசக சுவாமிகள் சற்குருவைத் தேடினார். சற்குருவை இனங்காண்பதற்கு அவர் என்ன செய்தாரென்பதை அருமையானதொரு செய்யுளின் மூலம் விளக்குகின்றார், கடவுண்மாமுனிவர். அச் செய்யுள் வருமாறு:-

"மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் எறிவார் போலச்
சற்குரு வுளனோ என்று நாடுவார் தர்க்க மெல்லாம்
சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்லல் உற்றார"

மற்கடம் - குரங்கு. செழித்து வளர்ந்ததொரு விளாத்தி மரம். அதன்மீது குரங்கொன்றிருக்கிறது. அந்த மரத்தில் பல பழங்கள் பழுத்திருக்கின்றன. அந்தப் பழங்களைப் பெற விரும்புகின்றான். ஒருவன் ஒரு கல்லை எடுத்து பழத்தைக் குறிவைத் தெறிந்தால் பழம் விழும். பழத்தைப் பெற விரும்பியவன் அந்தப் பழத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவன், குரங்கின் மூலமாகவன்றி தன் முயற்சியால் பழத்தைப் பெற விரும்பவில்லை. அதனால் அவன் கல்லொன்றை எடுத்துக் குரங்குக்கு எறிகின்றான். தனக்குத் கல்லெறிந்தவனுக்குப் பதிலளிக்க குரங்கிடங் கல்லிருக்காது. அதனால் அந்தக் குரங்கு மரத்திலிருந்த நல்ல விளாம்பழங்களைப் பறித்து, தனக்குக்

கல்லெறிந்தவனுக்கு எறியும். பழத்தைப் பெறவிரும்பியவருக்குச் சுவையான கனி கிடைக்குமென்பதை உவமையாகக் கூறி மாணிக்கவாசக சுவாமிகள் சற்குருவைத் தேடி அவர் வாயிலாக ஞான நூல் உபதேசம் பெற்றார். என்பதை விளக்குகின்றார். கடவுண்மா முனிவர்.

"மற்கட விலங்கு தன்னால்........." என்னும் முதலையுடைய செய்யுளில் இடம்பெறும் உவமான உவமேயங்கள் வருமாறு :-

| **உவமானம்** | **உவமேயம்** |
|---|---|
| விளாமரம் | தர்க்கம் நடைபெறுமிடம் |
| மற்கடம் | குரு |
| கல்லெறி | வினா |
| நற்கனி | ஞான நூல் உபதேசம் |

இவ்வாறாக ஞான நூற் பொருளைக் கேட்டுச் சிந்திப்பதால் வரும் ஞானமும் பாசஞானமேயாகும்.

"வேதம் சாத்திர மிருதி புராணம் கலை ஞானம்
விரும்பு அசபை வைகரி ஆதித் திறங்கள் மேலாம்
நாதமுடி வானல்லாம் பாசஞானம்......................"

என்கின்றது சித்தியார். இப்பாச ஞானத்தால் இறைவனை அடைய முடியாது. சிவஞானத்தால் மாத்திரமே இறைவனை அடையமுடியும். அருளுருவாகிய குருவினாலன்றி ஆன்மாவில் ஞானந் தோன்றாது.

"ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்
பானு வொழியப் பெறின"

என்கின்றது திருவருட்பயன்

கல் - சூரியகாந்தக்கல்: பானு - சூரியன்

சூரிய ஒளியின்றிச் சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றாது. அதுபோல அருட் குருவினாலன்றி ஆன்மாவில் ஞானந் தேன்றாதென்பது மேலே தரப்பட்ட குறட்பாவின் கருத்து.

குருவினாலன்றிச் சிவஞானந் தோன்றாதாயின். ஞான நூல்களைக் கற்பதனால் வரும் பயன் என்ன வென்னும் வினா எழலாம். இவ்வினாவுக்கு

"ஞான நூல் தனைஓதல் ஓது வித்தல்
நற் பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல்
நன்றா ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந் தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"

என்று விடை கூறுகின்றது. சித்தியார்

ஞான நூல் ஓதல் முதலிய ஐந்தாலும் பெறுவது பாச ஞானமேயானாலும் அது ஞான குருவை அடைந்து சிவஞானம் பெறுவதற்குரிய வழியாய் அமையும்.

சற்குருவை நாடிய மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் குருமூர்த்தியை அடைந்து சிவஞானம் பெற்ற வரலாறு இவ்வுண்மையை உணர்த்து வதற்குரிய சான்றாகும்.

**உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று**
**ஈவார்மேல் நிற்கும் புகழ்**

உலகத்தில் ஒருவரைப் பற்றிச் சிறப்பித்துச் சொல்பவர் சொல்பவை எல்லாம், வறுமையால் இரப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றை ஈபவர் மேல் நிற்கின்ற புகழே ஆகும். 232

# முக்கரண வழிபாடு

கி. வ. ஜெகநாதன்

அம்பிகையின் திருவடியைச் சென்னியிலே வைத்து மகிழ்ந்த அபிராமிபட்டர், திரிகரணங்களாலும் அவளை வணங்கி வழிபட்டு வாழும் இயல்புடையவர். அன்னையின் திருவடிகளைத் தலைக்கு அணியாகச் சூடுவதோடு, அவள் மந்திரத்தைத் தியானிப்பதும், அவளுடைய ஆகமங்களை வாயாரச் சொல்லிப் பாராயணம் செய்வதும் அவருடைய வழிபாட்டு முறைகளாக இருந்தன. அவற்றை ஐந்தாவது பாட்டில் சொல்கிறார்.

முன்பாட்டில், "அந்தரி பாதம் என் சென்னியதே" என்று படர்க்கையிலே வைத்துச் சொன்னவர், இந்தப் பாட்டில் அம்பிகையை முன்னிலைப்படுத்திச் சொல்கிறார்.

சிந்துர வண்ணப்பெண்ணே!

என்று விளிக்கிறார்.

அம்பிகையாகிய திரிபுரசுந்தரி செக்கச் சிவந்த திரு மேனியுடையவள். அந்தத் திருமேனியின் சமுதாய சோபையை முதல் பாட்டிலே, "உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்" என்று பாராட்டித் துதிக்கத் தொடங்கினவர் அல்லவா? பிராட்டியின் பிரசாதப் பொருளாகிய குங்குமத்தைக் காணும் போதெல்லாம் அவளுடைய திரு மேனியை நினைத்து உருகுவது பக்தர்களுக்கு இயல்பு. "சிந்துர வண்ணத்தினாள்" (8) "சிந்துர மேனியள்" (43) என்று பின்னும் இவ்வாசிரியர் கூறுகிறார். ஸ்ரீ வித்யா உபாசகர் ஆதலின் இவர் தம்முடைய தியானத்தில் திரிபுரசுந்தரியை நினைப்பவர் ஆதலின் அவளுடைய செவ்வண்ணத் திருமேனியையே அடிக்கடி நினைவு கூர்வார்.

நம்முடைய தலை சிக்குப்படிவது; தக்கபடி வைத்திராவிட்டால் நாற்றம் எடுப்பது. தலையில் மலர் சூடுவது கேசத்திலுள்ள நாற்றத்தைப் போக்கிக் குளிர்ச்சி தரும் பொருட்டு. ஆடவரும் மலர் அணிவது உண்டு. மலர் தலையில் கேசத்திற்கு அழகு தந்து மனமும் தண்மையும் தரும். ஆனால் தலையில் மற்றொன்று இருக்கிறது. அந்த வடுவை வெறும் மலரால் மாற்ற இயலாது. பிரமதேவன் எழுதிய எழுத்துத்தான் அது. அதைப் போக்கும் ஆற்றலுடைய தாமரை ஒன்று உண்டு. அது தான் அம்பிகையின் திருவடித் தாமரை. தம் தலைக்குப் பூவாக அம்மையின் திருவடியைச் சூடுபவர் அபிராமிபட்டர். அப்பர் தம் தேவாரத்தில் இறைவனுடைய திருவடி அப்பூதியடிகளின் குஞ்சிப்பூவாக இருக்கிறதென்று பாடுகிறார்.

"அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய"

என்பது அது. அவ்வாறே இவ்வாசிரியரும் அம்பிகையின் பொலிவு பெற்ற திருவடித்தாமரையைத் தம் சென்னிப் பூவாகச் சூடியவர்.

Whatsoever is spoken in the world will abide as praise upon that man who gives one alms to the poor.
232

சென்னியது உன்பொன் திருவடித் தாமரை.

இறைவியின் திருவடிக்கும் நம் தலைக்கும் இணைப்பு உண்டாகாவிட்டால் இந்தப் பிறவி எடுத்தனால் பயன் இல்லை.

"கோளில் பொறியிற் குணம் இலவே
எண்குணத்தான் தாளை வணங்காத் தலை."

என்பது குறள். நமக்கு உத்தமாங்கமாக இருப்பது தலை. அம்மைக்கு உத்தமாங்கமாக இருப்பது திருவடி. இந்த இரண்டும் ஒன்றுபட்டால், நாம் பிறப்பு இறப்புகளில் உழலும் மனிதராக இராமல் அம்பிகையின் அடியாராகிவிடுவோம். திருவடியோடு தொடர்பு கொள்வதனால் தான் அடியார் என்ற பெயரே உண்டாயிற்று.

, முதலில் அன்னையின் திருவடித் தாமரையில் விழுந்து வணங்கி அப்பெருமாட்டியின் மந்திரத்தைத் தியானிக்க வேண்டும். யார் தன்னை மனத்தால் நினைக்கிறார்களோ, அவருடைய பாவத்தை நீக்குவது என்னும் பொருளை உடையது மந்திரம் என்னும் சொல். வாயினால் மந்திரத்தை வெளிப்படையாகச் சொல்வது மரபன்று. நாவை இயக்கிச் சொன்னாலும் புறத்தே புலனாகாமல் சொல்லவேண்டும்.

"ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி"

என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் சொல்கிறார்.

மந்திரங்களை மூன்று வகையாக ஜபிக்கலாம். வெளிப்படையாகப் பிறர் காதில் விழும்படி சொல்வதை வாசிகம் என்பர். மந்திரத்தின் முழு வடிவம் தெரியாமல் மெல்ல இரகசியமாகச் சொல்லுதலை மந்தம் என்பர். மனத்துள் தியானிப்பதை மானஸம் என்பர். இந்த மூன்று முறைகளிலும் ஒன்றை விட ஒன்று சிறந்தது. மிகச் சிறந்ததாகிய மானஸமே பெரியோர் விரும்புவது.

அம்மையின் மந்திரத்தை இடைவிடாமல் தம் சிந்தையிலே நிலைபெறச் செய்து தியானிக்கும் செயலையுடையவர் இந்த அன்பா.

சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம்.

அம்பிகையின் மந்திரங்கள் பலவகைப்படும். ஏகாக்ஷரீ, நவாக்ஷரீ, பஞ்சதசாக்ஷரீ, ஷோடசாக்ஷரீ என்று வெவ்வேறு மந்திரங்களைத் தக்க குருவின் முகமாக உபதேசம் செய்து ஜபிக்க வேண்டும். அப்படி ஜபிக்கும்போது அந்த மந்திரத்திற்கு ஏற்ற தியான சுலோகத்தைச் சொல்லி, அப்பால் ஜபம் செய்யவேண்டும். அந்தத் தியான சுலோகத்தில் மந்திரத்தின் தேவதையின் திருவுருவ வர்ணனை இருக்கும். அந்த உருவத்தை மனத்தில் இருத்தி மந்திரத்தை ஜபிக்க வேண்டும். இதற்காகவே ஒவ்வொரு மந்திரத்திற்கும் தனித்தனியே தியான சுலேகம் அமைந்திருக்கிறது.

மந்திரம் என் மனத்தில் மன்னியது என்று சொல்ல வந்தவர். வெறும் மந்திரம் மட்டும் அன்று உன்னுடைய உருவத் தியானமும் உடன் செய்கிறேன். என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவதற்கு,

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்**
**பொன்றாது நிற்பது ஒன்று இல்**
தனக்கு இணையில்லாது ஓங்கிய புகழல்லாமல், இவ்வுலகத்து அழியாமல் நிற்பது வேறொன்றுமில்லை 233

சிந்தையுள்ளே!

மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர

வண்ணப்பெண்ணே! என்று சேர்த்துச் சொன்னார்.

அம்பிகையின் திருவடியைத் தொழுது அவள் மந்திரத்தை ஜபித்து அவள் திருவுருவத்தைத் தியானித்து வாழ்வோருக்கு உலகியல் வந்து தாக்கும்போது சற்றே சலனம் உண்டாகலாம். உயர்ந்த இரத்தினத்தைப் பெற்றவன் அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டுவதோடு வேறு யாரும் அந்தப் பெட்டியை எடுத்துச் செல்லாதபடி பல காவலர்களிடையே அதை வைத்துக் காவல் செய்வான். இங்கே அம்மையின் மந்திரமாகிய மாணிக்கத்தை மனம் என்னும் பெட்டியில் வைத்தவர். அந்தப் பெட்டி உலகியல் வாசனையினால் களவு போகாதபடி அடியார்களினிடையே இருந்து பாதுகாக்கிறார். அவர்கள் எப்போதும் அன்னையையே தியானம் செய்கிறவர்கள். அவர்களுடைய கூட்டத்தினிடையே இருந்தால் நம்முடைய நல்ல பழக்கம் வலிமையை அடையும்; தீய பழக்கம் மறைந்துபோகும்.

மனிதன் ஒரு கூட்டத்தினிடையே பழகினால் அவர்களுடைய பழக்கம் அவனை அறியாமலேயே அவனுக்கும் சார்ந்துவிடும்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்

கினத்தியல்ப தாகும் அறிவு"

என்பது திருக்குறள். ஆதலின் நல்லவர்கள் சத்சங்கத்தையே நாடுவார்கள். அருமையான பொருளைப் பெற்றவர்கள் அதனை மேலும் மேலும் வளர்ப்பதற்குப் பாங்கான கூட்டத்திலே சேர்வது முறை.

இங்கே, இவ்வாசிரியர் அன்னையைத் தியானிக்கும் அடியாருடன் கூடுகிறார். அவர்கள் எப்போதும் அம்பிகையின் ஆகமங்களையும் அவற்றின் வழிவந்த நூல்களையும் ஓதிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களோடு கூடி எந்த முறையில் அவற்றைப் பாராயணம் செய்யவேண்டுமோ அந்த முறைப்படி ஆகமபத்ததிகளை இவ்வன்பரும் பாராணயம் செய்கிறார்.

ஆகம வழி வந்த நூல்களைப் பத்ததி என்று சொல்வது வழக்கம்; சதாசார பத்ததி என்பது போன்ற நூல்கள் அத்தகையவை.

"முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே

பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே"

ஆகமங்கள் சிவாகமம், வைஷ்ணவாகமம், சாக்தாகமம் என்று வெவ்வேறு பிரிவாக உள்ளன. ஆகமத்துக்குத் தந்திரம் என்பது ஒரு பெயர். பொதுவாக ஆகமம் என்றால் சிவாகமங்களையும், தந்திரம் என்றால் சாக்தாகமங்களையும் கொள்வது பெரு வழக்காகிவிட்டது.

அம்பிகையின் ஆகமங்கள் யாமளம் முதலிய பலவாகும். அறுபத்து நான்கு ஆகமங்கள் என்ற ஒரு கணக்கு உண்டு. 'சதுஷ்ஷஷ்ட்யாதந்த்ரை' என்று செளந்தர்ய லகரி கூறுகிறது. மற்ற ஆகமங்களை விட அம்பிகையின் தந்திர சாத்திரங்கள் மேலானவையாதலின் அவற்றைப் பரமாகமம் என்றார்.

12ம் பக்கம் பார்க்க

There is nothing that stands froth in the world imperishable, except fame, exalted in solitary greatness.

233

நூல்நயம்

# மௌன தவ முனிவர் கைலாசபதி வாழ்வும் சிந்தனையும்

பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம் பி.ஏ. (இலண்டன்)
கல்வி டிப்ளோமா

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையை அலங்கரித்தவர்கள் மூவர். இவர்கள் மும்மூர்த்திகள். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, அதிபர் மயிலிட்டி சி. சுவாமிநாதன், உப அதிபர் பொ. கைலாசபதி ஆகிய மூவருமே அவர்கள் ஆவர். இவர்களுள் கைலாசபதி அவர்கள் மௌன தவ முனிவராகப் போற்றப்பட்டார். மெய்ஞ்ஞானியாகிய அவரை வறுத்தவித்து என்றும் பழுத்துக் கனிந்தபழம் என்றும் பலரும் பாராட்டினர். அவர் இருமுறைவிவாகம் செய்தவர். இருபெண்குழந்தைகள் பெற்றெடுத்தவர். எனினும், என்றும் நித்தியப் பிரமசாரி போல் விளங்கி வந்தார். அவர் லௌகிக விஷயங்களில் அழுந்தியதில்லை சான்றாண்மைக்குரிய குணங்கள் பொலியப் பெற்ற சான்றோராக விளங்கினார். திருவள்ளுவரின் கூற்றாகிய

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால்பு ஊன்றிய தூண?" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக விளங்கிய சான்றோர் இவர்.

இவர் கல்வி கற்பிப்பதில் திறமை சாலி, இவரிடம் கற்று ஆசிரியர்களாய்ச் சேவை செய்யும் ஆயிரத்துக்கு மதிகமானோர் இவர் திறமைக்குச் சான்று. உளநூல் முதல் தோட்டப்பாடம் ஈறாக எல்லாப் பாடங்களும் கற்பித்திருக்கிறார். அன்றியும், ஆசிரியகலாசாலைகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பரீட்சித்தலும் புள்ளியிடலும் போன்ற பாடங்களையும் திறமையாகக் கற்பித்தார். 1942 - 1945 ஆம் ஆண்டுக்காலத்தில் அவரிடம் கல்விகற்கும் பேறு எமக்கும் கிடைத்தது. அக்காலந்தான் ஆசிரிய கலாசாலைப்பாடத்திட்டத்தில் மாற்றம் நிகழ்ந்தகாலம் அன்று கல்விப்பணிப்பாளராக விளங்கிய எச். எஸ். பெரேரா அவர்கள் பாடத்திட்டத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருந்தார். புதிய பாடத்திட்டப் பாடங்களையும் திறமையாகப் கற்பித்த பெருமையும் பொகைலாசபதிக்கு உண்டு. அன்றும் சமயக்கல்வியிலும் தத்துவ விசாரத்திலும் அவர் காட்டிய சாதனைகள் பல அவற்றையெல்லாம் இம்மலர் நினைவூட்டும் அருமையான பதிவேடாக விளங்குகின்றது.

கலாநிதி பண்டிதமணி கூறுவதுபோல அவரின் ஆழ்ந்த சிந்தனைகளையும் மௌன தவவாழ்வையும் நாமும் அன்று விளங்கிக் கொள்ளவில்லை. பண்டிதமணி வாயிலாகத் தான் அவற்றை ஓரளவிற்கு விளங்கிக் கொண்டோம். பண்டிதமணியுடன் கல்விகற்பித்து உப அதிபர் எவ்வாறு பண்டிதமணியின் குரு ஆனார் போன்ற விடயங்கள் சுவையான தகவல்கள். இலக்கிய இலக்கணக் கடலாகப்பண்டிதமணியைப்

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு

ஒருவன் நிலவுலகில் நிலையான புகழைச் செய்வானானால், தேவருலகம் அவனைப் போற்றுமேயன்றி, அறிவால் மட்டும் சிறந்தவரைப் போற்றாது. 234

போற்றி அவரிடம் கல்வி கற்றுவந்தோம். ஆனால், அவரோ அவற்றிலும் மேலான விளக்கங்களைத் தமக்குக் கற்பித்த குரு மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி யெனப் போற்றுகிறார். இவ்வாறான பல தகவல்களைப் பண்டிதமணியின் கட்டுரை தருகிறது.

பொ. கைலாசபதியவர்கள் நூற்றாண்டு நினைவு மலராகத் திகழ்வது மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி வாழ்வும் சிந்தனையும் என்னும் தொகுப்பாகும். இத் தொகுப்பின் பதிப்பாசிரியாக விளங்குபவர் அவரது பேரனாகிய சு. கைலாபதி அவர்களாவர். 2001 ஆம் ஆண்டு யூன் ஒன்பதாந்திகதி அவரது தொண்ணூற் றொன்பதாவது பிறந்த நாள் நினைவு மலராக இது மலர்ந்திருக்கிறது. இதில்

1) சிந்தனைச் செல்வர் பற்றிய கருத்துரைகள்.

2) சிந்தனைச் செல்வரின் கருத்துரைகள். என்பன

வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ் விருதுறைகளும் நூற்றாண்டு மலரிலும் மிளிர்வதைக்கண்டு மகிழ்ச்சியடை கின்றேன். நூற்றாண்டு மலரொன்று மலர வேண்டும். நூற்றாண்டு விழாச்சபை ஒன்று நிறுவப்படல் வேண்டும். என்றும் பாயிரம் கண்ட பி. நடராஜனின் பணி பாராட்டிற்குரியதாகும். மாயாவாதி போன்றவர்களின் செயல்கள் மௌன தவமுனிவரின் சிந்தனையில் நகைச்சுவையாகவும் தெளிவு பெறுகின்றன. நாவலர் பெருமானின் உயர்தகுதி. திருஞானசம்பந்தர் போன்றோரின் மேல்நிலை, காந்தி - ஜேசுநாதர் போன்றோரின் நிலைப்பாடுகள் தீட்சை - மந்திரம் உபதேசம் முதலிய பல விடயங்களில் அவரின் சிந்தனைகள், வாசகர்களின் மனத்திற்குப் பயனளிக்கவல்லன.

அவர்களின் வாழ்க்கைக் குறிப்புப்பற்றிய (திரு. ச. பரநிருப சிங்கம் அவர்களின் கட்டுரை) கட்டுரையில் கல்வியின் நோக்கம் எது என்பதை இவரது வாழ்க்கை மூலம் தெளிந்து கொள்ளலாம் இத்தனைக்கும் அறிவியல் பட்டமுடன் ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தவர் தான் மௌன தவ முனிவர், சைவ சித்தாந்தத்தை விளங்கியவரும், விளக்கியவரும் இவரென்பதையும் இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

பொ. கைலாசபதி அவர்கள் ஓய்வு பெற்ற போது பழைய ஆசிரிய மாணவ மாணவிகள் ஒரு மலரை வெளியிட்டிருந் தார்கள். அம்மலரிலிருந்து எடுக்கப்பட்ட விடயங்களும் இம்மலரை அணி செய்கின்றன. மனந்தூயவர்களின் அரிய செயல்கள், அந்தர் முக நோக்குள்ளவர்களின் அந்தக்கரண சுத்தி என்பனவற்றை மௌனதவ முனிவரில் கண்டவர் தாம் பண்டிதமணி சி. க. அவர்கள். அவற்றை அவர் எமக்கும் விளக்கும் பாங்கை யாவரும் கண்டு நயக்கலாம். சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் ஒரு மெய்ஞ்ஞானிவறுத்தவித்தாக எமக்குத் தரும் கருத்துக்கள் எல்லோர் சிந்தனைக்கும் விருந்தாகும்.

மேலும், அவரது இளமை நினைவுகளைத் திரு. வே நடராசா அவர்கள் எம்கண்முன் நிறுத்தியுள்ளார். திரு த. இராம்நாத பிள்ளை அவர்களும் பண்டிதை

If one has acquired extensive fame within the limits of the earth, the world of the gods will no longer praise the gods. 234

த. வேத நாயகி அம்மாள் அவர்களும் தங்கள் அநுபவங்கள் வாயிலாக மௌனதவ முனி கருத்துக்களைத் தந்துள்ளார்கள்.

இ. கிருஷ்ணபிள்ளை தொகுத்தளித்த சிந்தனை அமுதத்துளிகளை இம்மலரிலும் மாந்தி மகிழலாம். காலமும் பக்கங்களும் பொ. கைலாசபதி சிந்தனைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (1994) காட்டும் முறைப்படி குறிக்கப்பட்டிருப்பது ஒரு விசேட அம்சம் இக்காலத்து வருணம் எது? ஆச்சிரமம் எது என்பன போன்றவற்றிற்கு அருமையான விளக்கம் தருகிறார். மௌனமுனி

கொலைகளில் பெரிய கொலை அறிவுக் கொலை

தமிழன் :அன்பை - கற்பை அறிந்தவன் ஆரியன்: வீரம் - கொடை அறிந்தவன் என்றவை போன்ற அவரது சிந்தனை முத்துக்கள் இம்மலரில் சிதறிக்கிடக்கின்றன. அவற்றை அறிந்து தெளிந்து அணிவோமாயின் அழகும் பயனும் வந்தெய்து மன்றோ!

மௌன தவமுனிவரின் அருள் வாக்குகள் சில எமது சிந்தனைக்கும் எட்டாதனவாகவே விளங்குகின்றன. எனினும் சாதகர்களுக் கேனும் அவை உதவும் என்பதில் ஐயமின்று. பாதைதவறி அலையும் இன்றைய மக்களின் கண்களைத் திறக்க - நல்வழிகாட்ட மௌனதவ முனிவரின் சிந்தனைகள் நல்ல உபகாரமாக அமைந்து இம்மலர் மணம் வீசுவதாக.

---

9ம் பக்கத் தொடர்ச்சி

அம்பிகையின் திருவடித் தாமரையைச் சென்னியிலே வைத்துக் காயத்தால் ஆகும் வழிபாட்டைச் செய்தார். அவள் திருமந்திரத்தைச் சிந்தையுள்ளே மன்னச் செய்து மனத்தால் ஆகும். வழிபாட்டைச் செய்தார். அவள் அடியாருடன் கூடிப் பரமாகம பத்ததியைப் பன்னி வாக்காலாகும் வழிபாட்டைச் செய்தார். இப்படி மனோவாக்குக் காயங்களாகிய முக்கரணங்களாலும் வழிபாடு புரிந்தார் அபிராமிப்பட்டர்.

சென்னிய துன்பொற் றிருவடித்
தாமரைஎன் சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரம்
சிந்தூர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடி யாருடன்
கூடி முறைமுறையே
பன்னிய தென்றும் உன் றன்பர
மாகம பத்ததியே.

(சிந்துரத்தைப் போன்ற செவ்வண்ணத் திருமேனி படைத்த இளம் பெண் உருவத்தில் எழுந்தருளியிருக்கும் தாயே, அடியேனுடைய தலையின்மேல் இருப்பது உன்னுடைய பொலிவுபெற்ற அழகிய பாதமாகிய தாமரை மலர்; அடியேனுடைய மனத்திலே என்றும் நிலையாக இருப்பது உன்னுடைய தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம்; உன்னையே தியானித்து வாழும் அடியார்களுடன் என்றும் முறையாகப் பாராயணம் செய்பவை உன்னுடைய மேலான ஆகம பத்ததிகளாகும்.

பொன் - பொலிவு. முன்னிய - எண்ணிய; தியானித்த. முறை முறையென்றது பலகாலும் பாராயணம் செய்வதைக் குறிப்பது. பன்னுதல் - பலகால் சொல்லுதல் பன்னியது என்பது தொகுதி ஒருமை)

**நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்**
**வித்தகர்க்கு அல்லால் அரிது**

புகழுடம்பின் கரு வளர்வது போல், பூதவுடம்பு தளர்வதும், அப்புகழுடம்பின் பிறப்பாகிய பூதவுடம்பின் இறப்பும், அறிஞர்க்கே அல்லாமல் மற்றவர்க்கு இல்லை. 235

# தைப்பூசம்

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை

சைவ வாழ்வில் சிவத்துவம் முதன்மையானது. சிவனை முழுமுதற் கடவுளாக, பரம் பொருளாக, ஆதியும் அந்தமுமாக வழிபாடு செய்பவர்களே சைவசமயிகள்.

இறைவனாகிய சிவன் எங்கும், எவையும் நீக்கமற நிறைந்து நிற்பதோடு, அவற்றுடன் இயைந்தும் வேறாகியும் நிற்பன். இந்நிலையினை ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் அத்துவிதநிலை என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது.

இறைவன் தான் நிறைந்த தன்மையனாகவே அருள் வெளியாகவே, இருந்து கொண்டு, தன் அருளாகிய சக்தி எனப்படும் ஆற்றலால் விந்துவைக் கலக்குவன். நாத முதலானவற்றைத் தோற்றுவிப்பன். அப்போது இறைவற்கு அருவம், உருவம் என்னும் இருவகை வடிவமும் இன்றாம். தெரிவதற்கரிய இந்நிலையினை அரிபிரமாதியர்களும் உணரார்.

உயிர்வர்க்கங்கள் உய்திபெறும் பொருட்டே இப்பரம் பொருளாகிய இறைவன் அருள் திருமேனிகளை மேற்கொள்ளுகின்றான். இத்திருமேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என முத்திறப்படும் என சைவ சித்தாந்தம் புகலுகின்றது.

"அருவமும் உருவுமாகி அநாதியமாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங்கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய"

என்ற கந்தபுராணச் செய்யுள் சோதிப்பிழம்பாகிய பரம்பொருளே உலகமுய்ய திருமுருகனாகத் தோற்றம் கொண்டதெனக் கூறியுள்ளமை கருதத்தக்கது. சிவபரம்பொருளின் சிவபேத வடிவங்களில் அர்த்தநாரீஸ்வர வடிவமும், தெட்சணாமூர்த்தி வடிவமும் நடராச வடிவமும் சிறப்புடையன, சிந்தனைக்குரியன

அர்த்தநாரீஸ்வர வடிவம், பரம்பொருள், அருளாகிய சக்தியோடு பிரிவற நிற்கும் நிலையை உணர்த்துகின்றது. தன்னிலைமையை மன்னுயிர்கள் அடையச் செய்யும் சக்தியை பின்னமில்லாது உணர்த்திக் காட்டும் வடிவே அர்த்த நாரீஸ்வரத் தோற்றம் இத் தோற்றப் பொலிவினை மணிவாசகர்.

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி

என்று பாடுவதன் மூலம்அர்த்த நாரீஸ்வரவடிவம் இறையின் தொன்மையான, ஆதியான வடிவம் என்று தெளிவுறுத்துகின்றார்.

அடுத்ததாக தெட்சணாமூர்த்தி வடிவம் இறைவன் அன்றாலின் கீழ் இருந்து நால்வர்க்கு அறமுரைத்த கோல வடிவமாகும். இவ்வடிவத்தினைச் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

"பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்
பல்லுலகினில் உயிர் வாழ்க்கை
கண்ட நாதனா"

என்று குறிப்பிடுவதன் மூலம் பல்லுலகிலும் உயிர் வாழ்க்கை செம்மை பெறச் செய்யும் கோலம் இதுவென உணரலாம். மற்றும் நடராசப் பெருமானுடைய வடிவம் விளக்கும் தன்மையை விரிவாக நோக்க வேண்டும்.

"உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகு பேரிச்சா ஞானக்கிரியை உட்கரணமாக
அலகிலா உயிர்ப்புலன்கட்கறிவினை ஆக்க ஐந்து
நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன்"

என்று கூறும் சிவஞான சித்தியார் செய்யுள் இறைவன் உயிர்களுக்காக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் ஐந்தொழில் செய்யும்முறையினை மிக நுட்பமாகக் கூறுகின்றது.

இப்பஞ்சகிருத்தியத்தின் தன்மையை எம்மனோர் உளங் கொள்ளத்தக்கதான அருட்டிரு மேனியே நடராசவடிவம்

கடவுள் எந்தவித உபாதையு மில்லாதவன். ஆதலால் அவனுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. எந்த அண்டமும் அவனுக்குத் தேவையில்லை என்றாலும் இத்தகைய உபாதை ஒன்றும் இல்லாதவனாகிய உயர்வுடைய பரமனே, எல்லாவித குறைபாடுகளும் உடைய உயிர்களை ஈடேற்ற வேண்டு மென்ற இணையற்ற கருணையுடையவனாக எப்போதும் உள்ளான். இந்தக்கருணையை நீக்கிட அவனால் ஆகாது. எனவே கருணை ஆண்டவனை விட்டுப் பிரியாத இயல்பாகும். இந்த நீங்காக் கருணை நிலையமாக, இறைவன் இருத்தலால் அவன் உயிர்களுக்கென ஓய்வின்றி உழைத்த வண்ணம் இருக்கிறான். அவனுடைய இந்த உழைப்பைத் திருக்கூத்தென்பர். இதுவே பஞ்சகிருத்திய நடனம் ஆகும்.

உயிர் அறியாமையாகிய காரிருளில் மூழ்கி தன்னையே உணர முடியாது இருக்கும் நிலை கேவலநிலை எனப்படும். இந்நிலையில் இருக்கும் உயிர் உய்தியடைவதற்காகவே பெருங் கருணாநிதியாகிய இறைவன் அதற்கு வேண்டிய தனு, கரண, புவன, போகங்களை அவ்வவற்றின் வினைக்கேற்ப அருளி அவ்வுயிர்களை கேவலநிலையில் இருந்து சகல நிலைக்கு கொணர்கின்றான்.

கேவலநிலையினை நள்ளிருள் எனக்குறிப்பிடலாம். அவ்விருளில் உயிர் அறிவின்றி இருக்கும். அதற்கு அறிவுவரச் செய்வதற்காகவே இறைவன் ஐந்தொழிலைச் செய்து சகல நிலைப்படுத்துகின்றான். இது அவன் திருக்கூத்து திருநடனம் இதனையே மணிவாசகப் பெருமான்

"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே"
என்று குறிப்பிடுகின்றார்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**
ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அப்புகழுக்கு உரிய தகுதி இல்லாதவர் அங்குத் தோன்றுவதை விடத் தோன்றாமல் ஒதுங்கிருப்பது நல்லது. 236

நள்ளிருள் என்பது ஆன்மாவின் கேவலநிலை. அதாவது பிரபஞ்சமெல்லாம் ஒடுங்கியிருக்கும் காலம். சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சமெல்லாம் சுத்தமாயையில் ஒடுங்கியிருக்கும். சுத்தமாயை சிவசத்தியில் ஒடுங்கும். சத்தி சிவத்துடன் ஐக்கியமாகி இருக்கும்.

மீண்டும் புனருற்பவம் ஆவதற்காக சிவன் ஐந்தொழிலாகிய கூத்தினைச் செய்கின்றான். இவ்வாறே உயிர் சகல நிலையில் கிடந்து உழன்று மெய்யறிவினை - ஞானத்தை - திருவருள்வயப்படுந்தனையும் - சுத்தநிலையடையும் வரை இத்திருக்கூத்து நடைபெறும்.

இத்திருக்கூத்தாகிய பஞ்சகிருத்தியம் இடைவிடாது நடைபெறுகின்றது. அதனை உணர்த்தவே "பயின்றாடும்" என்று கூறப்பட்டது. பயிலுதல் இடைவிடாது நடைபெறுதல் "நாதன்" என்பது தலைவன் என்பதைக் குறிப்பது தலையாயவர் என்பதே தலைவன் என்பதன் கருத்து "தன்னை அடைந்தார் வினைதீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடன் ஆவது" என்று நாவுக்கரசர் தமது கூற்றாயினவாறு பதிகத்திலேயே கூறியுள்ளமை உளங் கொள்ளத்தக்கது.

மேலும் திருக்கூத்து உயிர்கள் உய்தியடைவதற்காகவே என்பதை

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்
தொழிந்தோம் எய்யாமற்காப்பாய்
எமையேலேரெம்பாவாய்"

என்னும் மணிவாசகப் பெருமான் வாக்காலும் உணரலாம்.

நடராசப் பெருமானின் திருநடனம் உணர்த்தும் உண்மையைச் சைவசித்தாந்த நூலாகிய உண்மை விளக்கம் பின்வருமாறு விவரிக்கின்றதைக் காணலாம்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

துடியெனப்படும் தமருகம் ஏந்திய கரத்தினால் படைத்தலையும் அபயகரமாகிய அமைந்தகரத்தினால் காத்தலையும், அக்கினி ஏந்திய கரத்தினால் அழித்தலையும், உறுதியாக ஊன்றிய திருவடியினால் மறைத்தலையும், குஞ்சித பாதமாகிய தூக்கிய திருவடியினால் அருளலையும் குறிப்பதாக உள்ள முறைமையிலே முத்திபஞ்ச கிருத்தியமே நடராசப் பெருமான் திருக்கூத்தாகும்.

நடராசப் பெருமானுடைய திருக்கூத்தினைப் பற்றி திருமூலர்

"அம்பலம் ஆடரங்காக அதன் மீதே
எம்பரன் ஆடும் இரு தாளின்ரொளி
உம்பரமாம் ஐந்து நாதத்து ரேகையுள்
தம்பதமாய் நின்று தான் வந்தருளுமே"

"ஆதிபரன் ஆட அங்கைக்கனலாட
ஓதுஞ்சடையாட உன்மத்தமுற்றாடப்
பாதிமதியாடப் பாரண்டமீதாட
நாதமோடாடினான் நாதாந்த நட்டமே"

என்று போற்றுகின்றார்.

If you appear (in this world) appear with fame. For those who are destitute of it will be better not to be born than to be born. 236

"வேதங்கள் ஆடமிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக்கிளர் அண்டம் ஏழமாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதங் கொண்டாடினார் ஞான ஆனந்தக்கூத்தே"

என்று எம்பெருமான் தில்லையிலே ஆடிய ஞானக் கூத்தினைத் திருமூலர் போற்றுகின்றார்.

தை மாதம் ஒரு தலை சிறந்த மாதமாகும். சூரிய பகவான் நற் பார்வையால் நற்கருமங்கள் நன்றே நடந்தேறுகின்றன. உத்தராயண புண்ணிய காலம் என்பர் பெரியோர் தை மாதத்துக்கான நட்சத்திரம் பூசம் ஆகும். வடமொழியில் தை மாதத்திற்கு புஷ்ய மாதம் என்பர். ஆகவே புஷ்ய மாத புஷ்ய நட்சத்திரம் சிறப்படைகின்றது. தை மாசத்துப் பூச நட்சத்திர தினத்தைத் தைபூசம் என்பர். இத்தைப்பூசத் தினம் சிவவிரதநாளாகும். இதனால் விசேடமாக எல்லாச் சிவாலயங்களிலும் சிறப்பு அபிஷேகம் நடைபெறுகின்றது. சிறப்பான பூஜையும் இடம் பெறுகின்றது.

தை மாத பூச நட்சத்திரத்தன்று பஞ்சகிருத்திய நாயகனாகிய ஸ்ரீமன் நடராசப் பெருமானுடைய திரு நடனம் நடைபெற்றது என்பர்.

தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடுஞ் சித்தயோக தினம்வர அன்று மத்தியானத்திலே, ஆயிரம் முகத்தையுடைய பானுகம்பர் ஆயிரஞ்சங்கூத, ஆயிரந் தோளுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்சதுந்துபி ஒலியும் வேதவொலியும், கந்தர்வருடைய கீதஒலியும் மிக்கெழ ஞான சபையிலே சிவபெருமான் உமாதேவியாரோடுநின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளினார். வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலி முனிவர் என்னும் இருவரும் பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் தில்லை வாழ்ந்தணர் மூவாயிரவரும் சிவனருளாலே ஞானக்கண்ணைப்பெற்று அவருடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்து உரோமஞ்சிலிர்ப்ப, நெஞ்சு நெக்குருகக் கண்ணீர் பொழிய சிவானந்தக் கடலில் மூழ்கினார்கள்.

சிவபெருமான் அன்று தொடங்கித் தேவர்களும் வியாக்கிரர், பதஞ்சலிமுனிவர் முதலாயினோர் வணங்கச் சிவகாமியம்மை யாரோடு கனகசபையிலே எக்காலமுந் திருநிருத்தத்தைச் செய்தருளு வராயினர்.

என்று நாவலர் பெருமான் தைப்பூசத்திருநாள் சிறப்புப்பற்றிக் கூறியுள்ளார்.

தைமாசத்தில் பௌர்ணமி சேரும் பூசநாள் மிகவும் விசேஷமானதாகும். இந்நாளின் சிறப்புப்பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்.

"மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றன் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று பூம்பாவையை உயிர்த்தெழப் பாடிய பதிகத்திலே பாடியது குறிப்பிடத்தக்கது.

தில்லை மூவாயிரவர்களுக்கும் மனு மகன் இரணியவர் மனுக்கும் தில்லை நடராசர் தரிசனங் கொடுத்த தினமும் இத்தைப்பூசத்திருநாளே. தைப்பூசம் முருகனுக்குரிய விசேட தினமாகும் ஆறுபடை வீட்டு யாத்திரைகாலமும் இதுவாகும். இதனால் விரத அனுட்டானத் தோடு முருகப்பெருமானையும் வழிபடல் வழக்கமாகும். இத்தினத்தில் சிறப்போடு இறைவழி பாடாற்றி இறைவனருள் பெறுவோமாக.

**புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவது எவன்**

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழாதவர் (அது பற்றிப் பிறர் தம்மை இகழும் போது அதற்குக் காரணமான தம்மை நொந்து கொள்ளாமல்) தம்மை இகழ்பவரை நோவது எதற்கு? 237

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

"உலகமெல்லாம் ஒருவனோடொருத்தி ஒன்றென்
றுளதாகி நின்றளவில் ஒடுங்கும் பின்னும்
மலமதனால் உளதாகும் உருவ மாறி
வருவதுபோ வதுசெல்வ தாத லானும்
அலைவிலசே தனமாயை ஆத லானும்
அணுக்களுரு அடையுமறி விலாமை யானும்
நிலவுதொழில் மருவிஉரு நிற்றலானும்
நின்றெவையும் அளித்திடுவன் நிமலன் தானே".

இ - ள்: உலகம் எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உளதாகி நின்று அளவில் ஒடுங்கும் - உலகம் எல்லாம் அவன், அவள், அது, என்னும் அவயவப் பகுப்புடையதாயக் கன்மத்துக் கீடாகத் தோன்றி நின்று ஒரு கால எல்லையிலே ஒடுங்கும், மலமதனால் பின்பு உளதாகும் ஆணவ மலம் பரிபாகம் அடையும் பொருட்டு மீளவும் தோன்றும், உருவம் மாறி வருவது போவது செல்வது ஆதலானும் - அவ்வுடம்புகள் மாறி மாறித் தோன்றுவதும் அழிவதும் சுவர்க்க நரகங்களுக்குச் செல்வது மாதலானும் மாயை அலைவில் அசேதனம். ஆதலானும் - மாயை சலனமில்லாத சடம் ஆதலானும். அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையாலும் - உயிர்களுக்கு உடம்பை எடுத்தற்குரிய அறிவு இல்லாமையாலும் தொழில் மருவி நிலவு உரு நிற்றலானும் - ஒருவனுடைய தொழிலைப் பொருந்தி காணப்படுகின்ற சரீரம் நிலைபெறுதலானும், நிமலன் தானே நின்று எவையும் அளித்திடுவன் - நிர்மலனான சிவனே நிமித்த காரணனாக நின்று எல்லாவற்றையும் உண்டாக்குவன்.

உலகம் இயல்பாகவே நிலைபெறுகிறது அதனைத் தோற்றுவிக்க ஒரு கருத்தா வேண்டியதில்லை என்பன் உலகாயதன் இயல்பான ஒன்று எப்பொழுதும் ஒரே தன்மையாக இருத்தல் வேண்டும். இந்தப் பிரபஞ்சம் ஒரே விதமாகவன்றி அவன், அவள், அது எனப் பலவிதமாகத் தோன்றி நின்று அழிகின்றது. அதனால் இப் பிரபஞ்சத்துக்குத் தோற்றம் நிலை இறுதிகளைச் செய்யும் ஒரு கருத்தா உண்டெனபது பெறப்படும்.

உலகத்தைத் தோற்றுவித்தல் ஆணவ மல பரிபாகத்தின் பொருட்டும் ஒடுக்குதல் கன்மமல பரிபாகத்தின் பொருட்டும் நிறுத்துதல் மாயா மல பரிபாகத்தின் பொருட்டுமென்க.

ஆன்மா பூதபரிணாம தூல சரீரத்தோடு: பூமியிலும் பூதசாரதூல சரீரத்தோடு சுவர்க்கத்திலும் பூததூல சரீரத்தோடு நரகத்திலும் வினைப் பயனை அனுபவிக்கு மாதலால் உருவம் மாறி வருவது போவது செல்வது என்றார்.

புருடனின் சந்நிதியிலே மாயை தானே பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் என்பன் நிரீச்சுர சாங்கியன். அவனை மறுத்து, சடமும் சலனமற்றதுமான மாயை பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்க மாட்டாதென்பதை 'அலைவில் அசேதனம் மாயை' என்றதாற் குறிப்பிட்டார்.

Why do those who live without praise grieve those who despise them, though they do not grieve themselves?

237

அணுக்கள் - உயிர்கள்

கந்தமலர் அயன்படைக்கும் உலக மெல்லாம்
கண்ணன்அளித் திடும்அவைஎம் கடவுள் தானே
அந்தமுற அழித்திடுவன் ஆத லாலே
அயன்அரியும் அவனதுயர் அதிகா ரத்து
வந்துமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்தி ரவி எதிர்முளரி அலர்வுறும்ஒன் றலர்வான்
முகையாம் ஒன் றொன்றுலரும் முறையி னாமே.

இ - ள்: உலகமெல்லாம் கந்தமலர் அயன்படைக்கும் - உலகமெல்லாவற்றையும் வாசனை பொருந்திய தாமரை மலரிலிருக்கும் பிரமதேவன் படைப்பன், கண்ணன் அளித்திடும்- அவ்வுலகனைத்தையும் விட்டுணு காப்பன், எங்கள் கடவுள் தானே அவை அந்தமுற அழித்திடுவன் - எங்கள் கடவுளாகிய சிவனே அவற்றை முடிவு பெறும்படி அழிப்பன், அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து வந்து முறை - பிரமாவும் விட்டுணுவும் அவனது உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றுவந்து முறையாலே, எல்லாம் தன் தொழிலே மன்னுவிப்பன் முத்தொழிலையும் தன் தொழிலாகவே நிலைபெறச் செய்வன், வருவிப்பன் ஒடுங்கின முறையிலே பிரபஞ்சத்தைத் தோற்றச் செய்வன், விகாரங்கள் மருவான் - முத்தொழிலும் செய்தல் பற்றி விகாரமடையான், வானின் முந்து இரவி எதிர் - அது எப்படியெனில் ஆகாயத்தில் இயங்கும் சூரியனின் சந்நிதியில், முளரி ஒன்று அலர்வுறும் - தாமரை ஒன்றுமலரும், ஒன்று அலர்வான் முகையாம் - ஒன்று அலர்வதற்குப் பக்குவமான முகையாகும், ஒன்று உலரும் - ஒன்று வாடும், முறையின் ஆமே - தன் சந்நிதியில் தாமரை முத்தொழிற்படச் சூரியன் விகாரமற்று இருப்பது போலாம் எ - று.

படைத்தற்றொழில் பிரமாவுக்கும் காத்தற்றொழில் விட்டுணுவுக்கும் அழித்தற்றொழில் உருத்திரனுக்கும் உரியதெனக் கூறும் பாஞ்சராத்திரிகள் விட்டுணுவே முதற் கடவுளெனவும், இரணிய கருப்பர் படைத்தற் றொழிலைச் செய்யும் பிரமாவே முதற்கடவுளெனவுங் கூறுவர். அவர்கள் கூற்றை மறுத்து, பிரம விட்டுணுக்கள் விசேட புண்ணியத்தால், சிவனுடைய உயர்ந்த அதிகாரத்தைப் பெற்று, படைத்தல், காத்தல், தொழில்களைச் செய்கிறார்களேயன்றி, அவர்கள் அத் தொழில்களைச் சுதந்திரமாகச் செய்பவரல்லர் என்பது இச்செய்யுளின் கருத்து.

சுத்தமாயையில் நிகழும் ஐந்தொழிலையும் சிவபெருமான் தானே செய்தருளுவார். அசுத்தமாயையில் நிகழும் ஐந்தொழிலையும் தமது கிரியா சத்தியால் அனந்தேசுரரை அதிட்டித்து நின்று அவர் மூலமாகச் செய்வர்.

பிரகிருதி மாயையில் நிகழும் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் அனந்தேசுரர் வாயிலாகச் சீகண்ட உருத்திரை அதிட்டித்து நின்று செய்வர். சீகண்ட உருத்திரிடத்து செநநி உரோதயித்திரி ஆரிணி என்னும் சிவசத்திகள் பதிந்து நின்று முத்தொழிலையும் செய்யும் இவற்றில் செநநி பிரமாவிடத்து நின்று செலுத்திப் படைத்தற்றொழிலைச் செய்யும் உரோதயித்திரிவிட்ணுவிடத்து நின்றுசெலுத்திக் காத்தற்றொழிலையும் மறைத்தற்றொழிலையுஞ் செய்யும். ஆரிணி உருத்திரனிடத்து நின்று செலுத்தி அழித்தலையும் அருளலையும் செய்யும்

**வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்**
**எச்சம் பெறாஅ விடின**

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால், உலகத்தார்க்கு எல்லாம் அதுவே வசை என்று சொல்லுவர். (உலகவர் பழிப்பதற்கு வேறு குற்றம் வேண்டிதில்லை அதுவே போதும்.) 238

சூரியன் விகாரமின்றி நிற்க, அவன் சந்நிதியில் தாமரை முத்தொழிற்படும் என்னும் எடுத்துக்காட்டால். சிவன் ஒருவனே முத்தொழிலையும் இடையறாது செய்யின் விகார மடைவான் என்னும் பௌத்தரது ஆசங்கை மறுக்கப்பட்டது.

ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள் அணுக்கள் இடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றமிக அருள்புரிதல் ஏதுவாக உரைசெய்வர்
ஒடுக்கம்இளைப் பொழித்தல் மற்றைத்
தோற்றமல பாகம்வரக் காத்தல் போகம்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும்
போற்றலரும் அருள்அருளே யன்றி மற்றுப்
புகன்றவையும் அருளொழியப் புகலொ ணாதே.

இ - ள் : அரன் அருளின் ஏற்ற இவை - சிவபெருமான் அருள் காரணமாக மேற்கொண்ட படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் செயல்களை, திருவிளையாட்டாக இயம்புவர்கள் - அவனது திருவிளையாட் டென்றுங் கூறுவர். அணுக்கள் இடர்க் கடல் நின்று எடுத்தே ஊற்றம் மிக அருள்புரிதல் ஏதுவாக உரைசெய்வர் ஆன்மாக்களைத் துன்பந் தருவதாகிய பிறவிக் கடலினின்றும் எடுத்து நிலைபேறு மிக அருள் புரிதல் காரணமாக எனவுங் கூறுவர், ஒடுக்கம் இளைப்பு ஒழித்தல் சங்காரம் பிறப்பிறப்பிற்பட்டு வருந்தும் உயிர்களின் இளைப்பை நீக்குதல், தோற்றம் மலபாகம் வர - படைப்பு உயிர்களைப் பற்றி இருக்கும் ஆணவமலத்தைப் பரிபாக மடையச் செய்தல், காத்தல் போகம் துய்ப்பித்தல் உயிர்களை உடலோடு நிலைபெறச் செய்தல் அவை கன்மத்துக் கீடாக நுகரவேண்டிய இன்ப துன்பங்களை நுகரச்செய்தல், திரோதாயி நிறுத்தல் ஆகும் - மறைத்தல் நுகரவேண்டிய காலமளவும் அப்போகங்களில் நிறுத்தலாகும், போற்றல் அரும் அருள் அருளே - புகழ்தற்கரிய அருள் என்பது அருள்புரிதலாகும், மற்று புகன்ற அவையும் அருள் ஒழிய புகல் ஒணாதே - அருளைத் தவிர்ந்த முன்னர்க் கூறுப்பட்ட மற்றைய நான்கு செயல்களையும் அருளென்று சொல்வதே யன்றி வேறுவிதமாகச் சொல்ல முடியாது எ - று.

'ஏற்ற' என்பதற்குத் 'தகுதியான' என உரை கூறினும் பொருந்தும் திரு விளையாட்டாக இயம்புவர்கள் - கிரீடாப் பிரமவாதிகளும் மாயாவாதிகளும் ஐந்தொழிலும் பிரமத்தின் விளையாட்டென்று கூறி, அவ்விளையாட்டு பிரமம் உலகமாயும் உயிர்களாயும் இறைவனாயும் வடிவுகொண்டு விளையாடும் விளையாட்டென்பர் அவ்வாறானால் பிரமத்தின் செயல் வீண் செயலெனக் கருதப்படும்.

சைவ சித்தாந்திகள் உயிர்களைப் பிறவிக் கடலினின்றுமெடுத்து அவற்றுக்கு நிலையான பேரின்பப் பெருவாழ்வைக் கொடுப்பதற்காகவே இறைவன் ஐந்தொழில் செய்கின்றான் என்பர்.

எம்மைப்போல முயன்று செய்யாமல், சிவபெருமான் ஐந்தொழிலையும் இது இவ்வாறாக என்னும் சங்கற்ப மாத்திரத்தாற் செய்வர் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே திருவிளையாட்டாக இயம்புவர்கள் என்றார் என உரை கூறினும் பொருந்தும்.

விளையாட்டாகச் செய்தல் - முயன்று செய்யாமை.

"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" எனவும் "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்....." எனவும் திருவாசகத்திற் கூறப்படுவதும் இக்கருத்துப் பற்றியதேயாகும்.

Not to beget fame will be esteemed a disgrace by all who are the world. 238

# ஆன்மா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலா

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத் தடையுடையவைகளாய் சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக் ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந் துழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள், அண்டசம் முட்டையிற்றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற்றோன்றுவன. உற்பிச்சம் வித்துவேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற்றோன்றுவன. எழுவகைப் பிறப்பக்களாவன: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்றது மரம் செடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி கீடம் பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினும் வேர் கொம்பு கொடி கிழங்குகளினும் தாவரங்கள் பிறக்கும். தாவரமென்றாலும் நிலையியற் பொருளென்றாலும், அசரமென்றாலும் பொருந்தும் தாவரமல்லாத மற்றை ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கமமென்றாலும், இயங்கியற் பொருளென்றாலும், சரமென்றாலும் பொருந்தும்.

தேவர்கள் பதினொரு நூறாயிர யோனி பேதம். மனிதர்கள் ஒன்பது நூறாயிர யோனி பேதம். நாற்கால் விலங்கு பத்து நூறாயிர யோனிபேதம். பறவை பத்து நூறாயிர யோனி பேதம் நீர் வாழ்வன பத்து நூறாயிர யோனி பேதம், ஊர்வன பதினைந்து நூறா யோனி பேதம். தாவரம் பத்தொன்பது நூறா யோனி பேதம் ஆகத்தொகை எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதம்.

ஆன்மாக்கள், தாம் எடுத்த சரீரத்துக்கு ஏற்ப, மெய், நாக்கு, மூக்கு,கண், செவி என்னும் ஐம்பொறிகளினாலும், சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும்

**வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா**
**யாக்கை பொறுத்த நிலம்**

புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம், பழிப்பற்ற வளமுள்ள விளைச்சல் குறையும். 239

மரமும் முதலியவை பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். இப்பியும் சங்கும் முதலியவை அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியவை அம்மூன்றினோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள்.விலங்கும் பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தினோடு சித்தத்தாலறியும் அறிவுமுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள், தாம் பூமியிலே செய்த நல்வினை தீவினையென்னும் இருவகை வினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும், அநுபவிக்கும். அப்படி அநுபவித்துத் தொலைத்துத் தொலையாமல் எஞ்சி நின்ற இரு வினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து, அவைகளின் பயன்களாகிய இன்பதுன்ப மிரண்டையும் அநுபவிக்கும். இப்படியே நமக்கு ஒரு நிலைமை இல்லாத கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல, கடவுளுடைய ஆஞ்ஞையினாலே, கருமத்துக்கு ஈடாக, மேலே உள்ள சுவர்க்கத்திலும், கீழே உள்ள நரகத்திலும், நடுவே உள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்திறந் துழலும் ஆன்மாக்கள் தாவரயோனி முதலிய கீழுள்ள யோனிக ளெல்லாவற்றினும் பிறந்து பிறந் திளைத்து, புண்ணிய மேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம். அவ்வருமை ஆராயுங்காலத்து, கடலைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலும். இத் தன்மையையுடைய மனிதப் பிறப்பை எடுப்பினும், வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையாகிய மனிதப் பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம கருப்பையில் அழியினும் அழியும். பத்து மாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்த பின் சில காலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசுக்குமேற் பதினாறு வயசுவரையிலுள்ள பாலாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயது வரையிலுள்ள தருணாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும் எப்படியும் இந்தச் சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாமே. அழியுங் காலமோ தெரியாதே இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோயாது வருமோ அதுவும் தெரியாதே. ஆதலால், இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங் கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்.

The ground which supports a body. without fame will diminish the reproachless riches of its produce.
239

# சிவவேடச் சிந்தையர்

சைவப்புலவர்மணி. வ. செல்லையா

சேதி நாட்டிலே திருக்கோவலூர் என்னும் ஓர் இராசதானி உண்டு. அங்கிருந்து அரசாண்டு வந்தவர்மெய்ப்பொருள் நாயனார். அவர் சிவனடியாரின் சிவ வேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தை செய்வார். அதன் காரணத்தால் அவருக்கு மெய்ப்பொருள் நாயனார் என்று பெயர் வழங்கலாயிற்று. வேதாகமங்களின் உண்மையை அறிந்து, அறிந்தபடி ஒழுகி வருபவர். அவர் தரும நெறி தவறாதவர். தம்மை எதிர்த்த மன்னரை ஜெயித்து மக்களுக்குக் கவசமுங் கண்ணாகவும் வாழ்ந்து வந்தார். சிவாலயங்களில் நித்திய நைமித்திய பூசைகள் முட்டின்றி நடைபெறச் சிறப்பாக நிவந் தங்கள் அமைத்தவர். தன்னிடம் வரும் சிவ பக்தர்களை மனமு வந்து வரவேற்று வேண்டுவன கொடுத்து உபசரிப்பார்.

இங்ஙனமாகச் சைவநீதியே தலைக்கொண்டு வாழ்ந்து வரும் நாளில், முத்திநாதன் என்னும் அரசன் அவரோடு போரிட யுத்த சந்நத்தனானான். நால்வகைப் படையோடு அவருடன் போர் புரிய வந்தான். அவன் பல முறை போர் செய்தும் மெய்ப்பொருள் நாயனாரை வெல்ல முடியாது புறமுதுகிட்டோடினான். ஆதலின் முத்தி நாதனுக்குப் பொறாமையே தலைக் கொண்டது. எப்படியும் அவரை ஜெயிக்க வேண்டும் மென்று நினைத்தான் யுத்தத்தால் அவரை வெல்ல முடியாது. சூழ்ச்சியால் அவரை மடக்க நினைத்தான். சிவ வேடத்தில் அவர் அளவிலாப் பக்தி கொண்டிருக்கிறார். விபூதி தரிக்கின்ற அவ்வடியார் வேடத்திற் சென்று கபடத்தால் வெல்ல வேண்டும் மென்று நினைத்தான்.

உடல் முழுவதும் விபூதியணிந்தான். சடைகளைச் சேர்த்துக் கட்டினான். காவிவஸ்திரமும் தரித்துக்கொண்டான். புத்தகம் போன்ற அமைப்பில் உள்ள பெட்டியை எடுத்துக் கொண்டான். அதற்கு கவளி என்று பெயர் அதற்குள் ஒரு கூரான ஆயுதம் ஒன்றை வைத்துக் கொண்டு புத்தகக் கவளியுடன் திருக்கோவலூரையடைந்தான். சென்றவன் அரச மாளிகை வாயிலிற் புகுந்தான். முன்னரே சிவ வேடதாரிகளை வணங்கி மரியாதையோடு உள்ளே புகவிட்டுப் பழகியவர்கள் வாயில் காவலாளிகள். ஆன்மையின் தற்போதும் பொய் வேடந் தாங்கி வந்த முத்திநாதனையும் சந்தேகமின்றி வணங்கி உட்புக விட்டார்கள். அவனும் எல்லா வாயில்களையுங் கடந்து இறுதி வாயிலையடைந்தான். அவ் வாயிலில் நின்ற தத்தன் என்பான் "இப்பொழுது இராசா நித்திரை செய்கிறார். நீர் சமய மறிந்து போகவேண்டும்." என்று அவனை அப்பாற் புக விடாமற் தடுத்தான். அதையும் பொருட்படுத்தாமல் முத்திநாதன் "நான் அவருக்குச் சாத்திரோபதேசம் செய்யப் போகிறேன். நீ என்னைத் தடுத்தலாகாது" என்று கூறி உட்புகுந்தான். அரசனுடன் மனைவியும் ஒருங்கு படுத்திருந்ததைக் கண்டும் முத்திநாதன் கட்டிலுக்கருகே பண்பின்றிச் சென்றான்.

அப்பொழுது மனைவியார் உடனுமெழுந்து மெய்ப்பொருள் நாயனாரை எழுப்பினார். அவர் விழித்தெழுந்து அவனை எதிர் கொண்டு வணங்கி நின்று சுவாமிதேவரீர் இங்கே எழுந்தருளக் காரணம் யாது? என்று வினவினார். அதற்கு முத்திநாதன் உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதி காலத்திலே

**வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்**

பழியில்லாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவர் ஆவார். புகழில்லாமல் வாழ்பவரே (உயிரோடிருந்தும்) இறந்தவராவார்.240

செய்தருளிய சைவாகமங்களுள் எவ்விடத்திலும் காணப்படாத ஓராகமத்தை உமக்கு போதிக்கக் கொண்டு வந்திருக்கிறேன் என்றான். மெய்ப்பொருள் நாயனார் அதைக் கேட்டு இதைப் பார்க்கிலும் உயர்ந்த பேறு அடியேனுக்கு உண்டோ? அதன் பொருளை வாசித்து விளக்கியருளுக என்று வேண்டி நினறார். முத்திநாதன் பட்டத்தரசி இல்லாமல் நானும் நீரும் வேறு இடத்திலிருக்க வேண்டும். என்றான். உடனே அரசன் பட்டத்தரசியை அந்தப்புரத்துக்கு அனுப்பி விட்டு முத்திநாதனை அழைத்துக் கொண்டு தனியறையை அடைந்தார். அங்கு அவனை ஓர் உயர்ந்த ஆசனத்திருத்தித் தான் கீழே பக்தி, சிரத்தையோடிருந்து கொண்டு இனி அதன் பொருளை உரையும் என்றார். முத்திநாதன் தன் கையில் வைத்திருந்த வஞ்சகக் கவளியை மடிமேல் வைத்துப் புத்தகம் அவிழ்ப்பதுபோல் அவிழ்த்தான். அரசர் அப்பொழுது கைகூப்பிக் கண்மூடி வணங்கினார். அதற்குள் மறைத்து வைத்த கூரிய உடைவாளைத் திடீரென எடுத்து அவரைக் குத்தினான். அரசன் சிவவேடமே மெய்ப்பொருள் என்று வணங்கினார்.

முத்திநாதன் உள்ளே புகுந்த போதே சந்தேகித்து யாவையும் அவதானித்து நின்ற தத்தன் என்பான் நொடிப்பொழுதிற் பாய்ந்து தன் உடைவாளை உருவி அவனை வெட்டப் போனான். அதற்கு முன் உடைவாளாற் குத்தப்பட்ட மெய்ப்பொருள் நாயனார் விழும் பொழுது தத்தா இவர் சிவனடியார் இவருக்கு ஒரு இடையூறுஞ் செய்யாதே என்று கையாற் தடுத்து விழுந்தார். மெய்ப்பொருள் நாயனாரை அவன் தலைதாழ்த்தி வணங்கி அவரைத் தாங்கி நின்று அடியேன் செய்யவேண்டிய குற்றவேல் யாது? என்றான். மெய்பொருள் நாயனார் வழியிலே இவருக்கு எவரும் இடையூறு செய்யாதபடி அழைத்துக் கொண்டு ஊர் எல்லையில் விட்டுவா என்று கூறினார்.

அங்ஙனமே தத்தன் முத்திநாதனை அழைத்துக்கொண்டு சென்றான். இராசாவை முத்திநாதன் குத்திய செய்தி ஊர் மக்கள் அறிந்து விட்டனர். ஆதலின் அவர்கள் முத்திநாதனைக் கொல்லச் சூழ்ந்து கொண்டனர். தத்தன் அவர்களைத் தடுத்து நிறுத்தி இந்தச் சிவபக்தருக்கு ஒருவரும் இடையூறு செய்யாதபடி இவரை ஊர் எல்லையில் அழைத்துக் கொண்டு சென்று விட்டுவா என்று இராசாவே எனக்குக் கட்டளையிட்டார். என்று கூறினான். அதனைக் கேட்ட உடனே அவர்கள் பயந்து அகன்று விட்டனர். தத்தன் அவனை அழைத்துக் கொண்டு நகரத்தைக் கடந்து சென்று அவனுக்குரிய காட்டு வழியில் விட்டு அரசமாளிகைக்கு வந்தான். சிவ வேடந் தாங்கி வந்த முத்திநாதனுக்கு ஒரு தீங்கும் நேரக் கூடாது. என்ற கொள்ளையுடையவர் மெய்ப்பொருள் நாயனாரை வணங்கி நின்று "சிவபக்தரை இடையூறு ஒன்றும் வராதபடி கொண்டுபோய் விட்டேன்" என்று கூறினான். அதனைக் கேட்டு மெய்ப்பொருள் நாயனார். இன்று நீர் எனக்குச் செய்த உபகாரத்தை வேறு யார் செய்ய வல்லார். என்று கூறி மனம் ஆறுதலடைந்தார்.

பின்னர் தனக்குப் பின் அரசராதற்குரிய குமாரர்களையும் மந்திரி முதலானவர்களையும் அழைத்தார். அவர்களுக்கு சைவாகம விதிப்படி விபூதி மேல்வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி போதித்தார். கனகசபையிலே ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் சபா நாதரைத் தியானம் பண்ணினார். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருள் நாயனாருக்கு காட்சியளித்துத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினார்.

Those live who live without disgrace. Those who live without fame live not. 240

# பிரதோஷ வழிபாடும் சோம சூத்திர பிரதக்ஷணமும்

சிவாகம ஞானசாகரம் சாக்தரத்னம்
திருக்கோலக்கா என். இராமநாத சிவாசாரியார்.

சிவபெருமானை எப்பொழுதும் வழிபாடு செய்ய வேண்டுமென்றாலும் புண்ணிய விரத தினங்களில் வழிபடுவது மிகுந்த புண்ணியப் பலன்களைத் தருவதுடன் பாவ நீக்கமும் தரவல்லது. சோமவாரம், சிவராத்திரி, பிரதோஷம் போன்ற விரதகாலங்களில் வழிபடுவது மிக சிறந்த பலன்களைத் தரும். பிரதோஷ வழிபாடு செய்து சாம்பன் என்ற புத்திரனை கிருஷ்ண பகவான் அடைந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

முன்னொரு காலத்தில் தேவர்கள் எல்லாம் ஒன்று கூடிஅரக்கர்களால் ஏற்படும் துன்பங்கள் நீங்கி வாழ பிரம தேவருடன் காக்கும் கடவுள் திருமாலிடம் சென்று சாவா மூவா நலம் பெற்று வாழ வழி யாது எனவேண்டினார்கள். திருமால் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்று உண்டால் மரணமில்லாமல் சந்ததமும் இளமையுடன் வாழலாம் என்று கூறினார். தேவர்கள் பாற்கடலைக் கடைய மந்தரமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு அசுரர்களையும் கூட்டாகச்சேர்த்துக்கொண்டு பாற்கடலைக் கடையத்தொடங்கினர். அன்றைய தினம் தசமி கடையும்போது மந்தரமலை பாற்கடலை அமிழ தொடங்கியது. திருமால் ஆதி கூர்மமாக வந்து மலையை மேலே தூக்கித் தந்தார். மறுதினம் ஏகாதசி அன்று தொடர்ந்து கடையும் போது வாசுகி வருத்தம் தாங்காமல் நஞ்சைக் கக்கியது. அபபோது கடலிலிருந்து ஒரு நஞ்சு உண்டாயிற்று. வாசுகி உமிழ்ந்த ஆலமும் கடலிடைத் தோன்றிய ஆலமும் கலந்து ஆலாலமாக எழுந்தது. பயங்கர வெப்பத்துடன் வெளிவந்த ஆலாலத்தால் உலகமே அழியும் நிலை ஏற்பட்டது. வெண் நிறமான திருமால் விஷ வேகத்தால் நீல நிறமானார். அமிர்தம் வேண்டியவர்களை ஆலாலம் தொல்லைபடுத்தியது.

தேவர்களை ஆலாலம் துரத்த இடமாகவும் வலமாகவும் ஓடினார்கள். எல்லாரும் கயிலை சென்று வாயிற் காப்பாளராக உள்ள நந்தியெம் பெருமானை வணங்கி தங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களைக் கூறிட நந்தியெம்பெருமான் ஸ்ரீ சிவபெருமானிடம் அழைத்துச் சென்றிட அனைவரும் வணங்கி ஆலாலம் தோன்றியதையும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தையும் கூறி தங்களையும் உலகத்தையும் காக்க வேண்டினர்.

தேவர்கள் முறையீட்டிற்கு இரங்கிய கருணையே வடிவான சிவபெருமான் தம் அணுக்கத் தொண்டராகிய சுந்தரரை அழைத்து அவ்விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டு வா எனப் பணித்தார். வானவர்களும் அணுக முடியாத அக்கொடிய விடத்தை பாற்கடலில் பரவி நின்ற ஆலாலத்தை தனது கையால் ஒரு நாவல் கனி போன்று திரட்டிக் கொணர்ந்து சிவபெருமானிடம் சுந்தரர் தந்தார். அவர் "ஆலாலசுந்தரர்" என சிவபெருமானிடம் பெயர் பெற்றார். எல்லா உயிர்களும் துன்பம் நீங்கி இன்புறும் வண்ணம் சிவபெருமான் அவ்வாலால நஞ்சை அமிர்தம் போல் கண்டத்தில் அடக்கி அருளினார். இதனை சுந்தரமூர்த்தி நாயனார். "உண்டாய நஞ்சை

உலக முய்யவே" என்று பாடினார். நஞ்சை உண்டால் உள் முகத்தில் உள்ள ஆருயிர்களும் உமிழ்ந்தால் வெளிமுகத்தில் உள்ள ஆருயிர்களும் அழிந்துவிடும். ஆதலின் உண்ணாமலும் உமிழாமலும் கண்டத்தில் அடக்கியதால் சிவந்த மேனியுடைய எம்பெருமானுடைய கண்டம் கொடிய நஞ்சின் விளைவாக நீலமாக ஆயிற்று அதனால் நீல கண்டர் என்ற பெயர் பெற்றார். இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரமாகும்.

ஆலாலத்தின் துன்பம் நீங்கப் பெற்ற தேவர்களும் மற்றவர்களும் இறைவனைத் துதித்து வணங்கினர். பாற்கடலை மீண்டும் கடைந்து எழும் அமிர்தத்தை உண்ணுமாறு சிவபெருமான் கட்டளையிட்டார். தொடர்ந்து ஏகாதசியன்று இரவு முன்போல கடலைக் கடைய தொடங்கினார்கள். பாற் கடலிலிருந்து ஐராவதம் என்ற யானை, கற்பகரு (கற்பகமரம்) காமதேனு (பசு) போன்ற சிறந்த பொருட்கள் வந்தன. தேவர்கள் பெற்றனர். இலக்குமி பாற்கடலிலிருந்து தோன்ற திருமால் ஏற்றுக்கொண்டார்.

மறுநாள் துவாதசி அன்று அதிகாலை அமிர்தம் தோன்றியது. தேவர்கள் அதனைப் பகிர்ந்துண்டனர். அமிர்தம் உண்டதால் அமரர்கள் ஆனார்கள். (மர: மரணம், அமர: மரணமில்லா வாழ்வு) அமிர்தம் உண்ட தேவர்கள் மகிழ்ச்சியால் துவாதசி அன்று ஆடியும் பாடியும் இருந்தனர்.

அடுத்த நாள் திரயோதசி பதிமூன்றாம் நாள் தாம் உண்டு களித்த மகிழ்ச்சியில் சிவபெருமானை வணங்க மறந்தனர். குற்றத்தினை உணர்ந்த தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தங்கள் குற்றத்தினை மன்னித்தருள வேண்டினர்.

கருணாமூர்த்தியான சிவபெருமான் தேவர்களுக்கு அருள்புரியத் திருவுளங் கொண்டு கயிலையில் அன்று மாலை பிரதோஷ வேளையில் (மாலை 4.30 முதல் 6.00 மணி வரை) தம் திருமுன் இருந்த நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகை காண ஆனந்த நடனம் செய்தருளினார். இதனை "சிவாகமம் ஸந்தியா நிருத்தம்" என்றும், சரஸ்வதி தன் கையில் வீணை இசைத்தும் இந்திரன் புல்லாங்குழல் வாசித்தும், பிரம்ம தேவன் தாளம் போடவும் இலக்குமி தேவி பாடல் இசைத்தும், திருமால் மிருதங்கம் வாசித்தும் நடனமாட தேவர்கள் பார்வதி தேவியின் பதியாகிய சிவபெருமானிடம் ஐயனே இந்தத் திருநடனக்காட்சியினை ஒவ்வொரு திரயோதசி மாலையில் தரிசிக்க அருள்பாலிக்க வேண்டும். என்று வேண்டிட அதன்படி அருள் செய்தார்.

அன்று முதல் ஒவ்வொரு திரயோதசி மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பிரதோஷம் ஏற்பட்டது.

வாக்தேவீ த்ருத வல்லகி சத மகோ வேணும் ததத் பத்மஜஸ்
தாலோன் னித்ர கரோ, ரமபகவதீ தோயப்ராயோ காஞ்சிதா
விஷ்ணுஸ் ஸாந்தர ம்ருதங்க வாதனபடுர் தேவாஸ் ஸமந்தாத் ஸ்திதா
ஸேவந்தோதமனுப் பிரதோஷ ஸமயே தேவம் ம்ருடானிபதிம்

தோஷி என்ற சொல்லுக்கு மகிழ்ச்சி என்ற பொருள் பிரதோஷ என்ற சொல்லுக்கு பெருமகிழ்ச்சி என்று பொருள்.

பிரதோஷ காலத்தில் திருமால் ஆலயத்தில் வழிபாடு செய்வது கூடாது.

சிவபெருமான் கண்டத்தில் இருக்கும் நஞ்சினை நந்தியெம் பெருமான் தன் நாவினால் நக்கி எடுத்துவிட எண்ணி நாவினால் நக்கிட நாக்கு நீல நிறமாயிற்று நந்திக்கு இறைவன் அருள்பாலிக்க அதன்

இரு கொம்புகளுக்கிடையில் திருநடனம் புரிந்தார். ரிஷப தேவருக்குக் காப்பரிசி, அறுகு முதலானவை கொடுக்கச் செய்தார். காப்பரிசி, அறுகு முதலானவை விஷ முறிவை தரக்கூடியவை.

தேவர்களைப் பார்த்து நந்திதேவர் ஆலாலம் தோன்றியபோது எவ்வாறு ஓடினீர்கள் என்று வினவ தாங்கள் இடமாகவும் வலமாகவும் ஓட அது எங்களை துரத்தியது என்றனர்.

அது போன்று ரிஷப தேவரிடமிருந்து இடமாகவும். சண்டிகேஸ்வரர் வரையும் செல்ல பிறகு ரிஷப தேவரை வலமாக கோமுகை வரை சென்று திரும்ப ரிஷப தேவரையும் பிறகு சண்டிகேஸ்வரரையும் மூன்று முறை வருதல் ஸோம சூத்ர பிரதட்சணம் என்று சுயம்பு ஆகமம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

"வ்ருஷம் சண்ட விருஷம் சைவ ஸோம சூத்ரம் புனர் விருஷம் சண்டஞ்ச ஸோம சுத்ரஞ்ச புனச்சண்டம் புனர் விருஷம் ஏவம் ஸவயாப ஸவ்யந்து ப்ரதக்ஷிண மிஹோதிதம்"

இந்த பிரதஷிணம் பிரதோஷ நாளில் பிரதோஷ காலத்தில் மட்டும் தான் செய்யவேண்டும். திருமுறைகளை பிற மாதங்களில் பாடி வழிபடலாம். ஆனால் மார்கழி மாதத்தில் திருவாதிரை உத்ஸவத்திற்கு முன் பத்து தினங்கள் திருமுறைகளை காப்பிட்டு திருவாசகத்தின் திருவெம்பாவை மட்டும் தான் பாராயணம் செய்வது மரபாக இருந்து வருகின்றது. அதுபோன்று சோமசூத்ர பிரதக்ஷினம் சிவாகம சான்றாக இருந்து வருகிறது.

பிரதோஷ காலம் ஐந்து வகைப்படும்.

1. நித்ய பிரதோஷம் ஒவ்வொரு நாளும் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை.
2. பக்ஷ பிரதோஷம் வளர்பிறை த்ரயோதசி அன்று மாலை 4.30 முதல் 6.00 மணி வரை
3. மாஸப் பிரதோஷம் தேய்பிறையில் த்ரயோதசி திதியில் மாலை வேளையில் வருவது.
4. மஹா பிரதோஷம் (சனி பிரதோஷம்)தேய் பிறையில் சனிக்கிழமை அன்று த்ரயோதசியில் வந்தால் மஹாப் பிரதோஷம் ஆகும்.
5. பிரளய பிரதோஷம் பிரளயம் ஏற்படுகின்ற எல்லா நேரத்திலும் எல்லா உயிர்களும் ஈஸ்வரனிடம் ஒடுங்கும். அதுவே பிரளய பிரதோஷம்.

**பிரதோஷ வழிபாட்டால் வழிபாடு செய்பவர்கள் பெறும் பயன்கள்:**

முதல் முதலில் பிரதோஷ வழிபாட்டை செய்து சாம்பன் என்ற புத்ரனை கிருஷ்ண பரமாத்மா பெற்றார் என மஹாபாரதம் கூறுகிறது. பிரதோஷ வழிபாட்டால் விருப்பமான மண வாழ்க்கை கிடைக்கச் செய்யும், புத்திர பேறு கிடைக்கச் செய்யும், தரித்திரம் நீங்கி மிகுந்த செல்வம் கிடைக்கச் செய்யும், நோயற்ற வாழ்வு கிடைக்கும். இவ்வளவு நலங்கள் தரக்கூடியது சிவ விரதங்களில் மேலானதாக உள்ளது. எனவே பிரதோஷ வழிபாடும் சோமசூத்ர பிரதக்ஷிணமும் மிக அவசியமே என்று சிவாகமங்களும் சிவபுராணங்களும் கூறுகின்றன.

நன்றி – மெய்கண்டார்.

# முருகன் பெருமை

ரா. பி. சேதுப்பிள்ளை

செந்தமிழ் பெருங்காவியமாகிய சிலப்பதிகாரத்தில், மலைநாட்டுக்குறவர் முருகனை வணங்கிய முறை விரித்துச் சொல்லப்படுகின்றது. குறக் குல மங்கையர் முரகனைக் குறித்து குரவைக் கூத்தாடும் வழக்கம் உண்டென்பது அக் காவியத்தால் அறியப்படும். குறிஞ்சி நிலத் தெய்மாகிய முருகன்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன"

என்பது குரவைப் பாட்டு. இவ் வழகிய பாட்டில் திருச்சீரலை வாயாகிய திருச்செந்தூரை முதன்மையாக அமைத்திருப்பது கருதத்தக்கதாகும். நக்கீரர் சீர் அலைவாய் என்று புகழ்ந்தவாறே, இளங்கோவடிகளும் சீர்கெழுசெந்தில் என்று திருச்செந்தூரைச் சிறப்பித்துள்ளார். கொங்கு நாட்டில் அமைந்த முருகப் பதிகளுள் தலைசிறந்தது திருச்செங்கோடு என்னும் மலைப்பகுதியாகும். அப் பழம்பதி தேவாரத் திருப்பாசுரத்தில் "கொடிமாடச் செங்குன்றூர்" என்று குறிக்கப்படுதலால் செந்நிறம் வாய்ந்த அக்குன்றின்மீது செல்வ நெடு மாடங்கள் சிறப்புற்று விளங்கிய தன்மை நன்கயப்படும்.

குன்றுதோறாடும் குமரனை குறவர்கள் தம் குலதெய்வமாகக் கொண்டு போற்றுவர். விலங்கினங்களை வேட்டையாடும் வேடரும், புள்ளினங்களை வலையிற் பிணிக்கும் புளிஞரும் முருகனோடு உறவு கொண்டாடும் முறை அறிந்து இன்புறற்பாலதாகும்.

திருக்குற்றால மலைச்சாரலில் பறவைகளை வேட்டையாடக் குறவர் இருவர் குறித்துச் சென்றார்கள். அணி அணியாக ஆலாவும் கொக்கும், காடையும் கம்புளும் மாடப்புறாவும் மடமயிலும், மற்றைய பறவைகளும் பறந்து ஓடிவந்தன. இவற்றைப் பிடிப்பதற்கு விரைவில் கண்ணி கொண்டு வருமாறு கூவும் பொழுது குறவன் பாடிய பாடல், குறிஞ்சிநிலத் தெய்வமாகிய முருகனைக் குறித்ததாகும்.

"மீறுமி லஞ்சிக்கு றத்தியைக் கொண்டசெவ்
வேட்குறவன் முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறுநாட் கூடிஓ ருகொக்குப் பட்டது
அகப்பட்ட கொக்கைஅ வித்தொரு சட்டியில்
சாறாக வைத்தபின் வேதப்பி ராமணர்
தாமும்கொண் டார்சைவர் தாமும்கொண் டார்தவப்
பேறாமு னிவரும் ஏற்றுக்கொண் டார்இதைப்
பிக்குச்சொல் லாமலே கொக்குப்ப டுக்கவே –
கண்ணி கொண்டுவாடா, குளுவா"

என்று குறவன் பணிக்கின்றான். கண்ணியைக் கையிலே கொண்டு பையவந்த குளுவனை நோக்கி, அடே! குளுவா! தேசத்துக் கொக்கெல்லாம் பல திக்குகளினின்றும் பறந்தோடி வருகுது பார்! அவற்றை வலையிலே தட்டி வீழ்த்தலாமே என்று நீ சிறிதும் தயங்க வேண்டாம். நம் குல முதல்வனாகிய முருகனே கொக்கை வேட்டையாடியுள்ளார். அப் பெருமான் ஆடிய முதல் வேட்டை கொக்கு வேட்டைதான். ஒரு பெருங் கொக்கை அடிப்பதற்கு அவர் ஆறுநாள் தொடர்ந்து திரிந்தார்; கடைசியாக அக்கொக்கை அடித்தார். அடித்த கொக்கு அவித்துச் சாறாக்கிச் சட்டியிலே வைத்தார்கள். சட்டியில் வைத்த சாற்றை, வேதியர் வியந்து உண்டார்கள்; சைவர்கள் போற்றி மகிழ்ந்தார்கள்; முனிவர்கள் தங்கள் அருந்தவத்தின் பயனாக அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆதலால், நாமும் கொக்கு வேட்டையாடுவோம் வாடா என்கிறான் குறவன் குறிஞ்சித் தெய்வமாகிய முருகப் பிரான் வேட்டையாடி ஒரு கொக்கை அடித்துக் கொடுத்தார் என்றும், செந்தண்மை பூண்ட அந்தணரும், சீலம் வாய்ந்த சைவரும், மன்னுயிரை எல்லாம் தம்முயிர் போல் போற்றும் முனிவரும் கொக்குச்சாற்றை விரும்பியுண்டார்களென்றும் குறவன் கூறுவது வியப்பாகத் தோன்றுகிறதன்றோ?

வெளிப்படையாக இவ்வாறு பொருள்படுகின்ற குறவன் வாக்கில் கந்தபுராணம் முழுவதும் அடங்கியிருக்கின்றது. அசுரர் குலத்தின் தலைவனாகிய சூரனை வென்றழிப்பதாக முருகன் புறப்பட்டார். அப் பாலனை எளியன் என்று எண்ணிய சூரன் ஆறு நாள் அரும்போர் புரிந்து அலைக்கழித்தான். அவன் எங்கெங்கே சென்றாலும் அங்கங்கே முருகனும் சென்றார். கடைசியாகப் பாலனை வஞ்சிக்கக் கருதிய சூரன் ஒரு மாமரத்தின் வடிவெடுத்து நின்றான். மாமரத்திற்குக் கொக்கு என்பது ஒரு பெயர். உருமாறிக் கொக்காக நின்ற சூரனை முருகன் வேலால் எறிந்து வீழ்த்தினார். அசுரனது ஆவணம் அழிந்தது. இரு கூறாகப் பிளந்த மாமரச் சூரன் சேவலும் மயிலுமாகி முருகன் சேவடியை அடைந்தான். இவ்வாறு மாமரமாய் நின்ற மாறுபடு சூரனை வென்று அவன் ஆணவத்தை அழித்த செய்ளையைக் குறவன் ஆறு நாள் கூடி ஒரு கொக்குப்பட்டது என்றும் அகப்பட்ட கொக்கை அவித்து ஒரு சட்டியில் சாறாக வைத்தார்கள். என்றும் நயம்பட உரைத்தான். சட்டி என்பது சஷ்டியாகும் சாறு என்று சொல் திரு விழா என்று பொருள்படும் ஆகவே சூரபதுமனை முருகன் வென்று இவ்வுலகிலுள்ள நல்லோரை வாழ்வித்த அரும் பெருஞ் செயலை ஆறுநாள் கந்தசட்டி திருநாளாகக் கொண்டு ஆன்றோர் போற்றுகின்றார்கள் என்பது அப் பாட்டின் கருத்தாகும்.